1990 ஆகஸ்ட் 20] [திரு. எம். அப்துல் லத்தீப்]

அந்தப் பணிகளுக்கே செல்லுகிறார்கள். வனப் பணியாளர்களும் அங்கே அடிக்கடி செல்வது இல்லை. அவர்கள் நோய்வாய்ப் பட்டால் அவர்களுக்கு மருத்துவ வசதி கூட அங்கே இல்லை என்பது முக்கியமான காரணங்களிலே ஒன்று. எனவே நெல்லி வாசல்நாட்டில் அருள்கூர்ந்து அந்த மலை ஜாதி மக்களுக்காக இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை ஏற்படுத்த அரசு முன் வருமா அல்லது நடவடிக்கையை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு சட்டமன்ற உறுப்பினர் கள் கூறியிருக்கிற கருத்துக்களையும் பரிசீலனை செய்ய, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை விரிவு படுத்துகின்றபோது, எண்ணிக்கையை அதிகரிக்கின்ற போது நிச்சயமாக கருத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்களுக்கு பதவி உயர்வுக்காக உயர்மட்டக் குழு.

* 6511 திரு. ஏ. தங்கராஜ்*:
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆதிதிராவிடர்களுக்கு பதவி உயர்வுக்காக உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. சுந்தரம்: தலைவர் அவர்களே, இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்.

பேரவைக் கூட்டத் தொடரின் முதல் நாளில் ''வினா விடை நேரம்'' இடம் பெறுவது குறித்தும் சில உறுப்பினர்களின் இருக்கைகள் மாற்றப்பெற்றுள்ளது தொடர்பாக நீதிமன்றத்திலும், குடியரசுத் தலைவரிடத்திலும், அவையிலும் எழுப்பப் பெற்றுள்ள பிரச்சினைகள் குறித்தும்.

திரு. கே. ரமணி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த அவையிலே இருக்கும்படியான உறுப்பினர்கள் உட்காரு வதற்கு இருக்கும்படியான இடங்களைத் தீர்மானித்து, இருக்கை களைத் தீர்மானித்து, அதற்கான உத்திரவுகளைப் போடும்படி